To receive Daily FREE GK, Current Affairs, Exams Notifications, Results Alerts for UPSC-IAS Exams
Create this sms from your mobile **JOIN RADIANIAS** and send to **09870807070.**

**IAS 2009** **TAMIL PAPER-I (Literature)**

**Time Allowed: Three Hours** **Maximum Marks: 300**

**INSTRUCTIONS**

Candidates should attempt questions **1** and **5** which are compulsory, and any **THREE** of the remaining questions, selecting at least **ONE** question from each Section. All questions from each Section. All questions carry equal marks. Answers must be written in **Tamil.**

## SECTION-A

**1)** பின் வருவனவற்றுள் எவையேனும் மூன்றினுக்கு ஒவ்வொன்றிற்கும் 200 சொற்களுக்கு மிகாமல் சிறு குறிப்பு வரைக. **20×3=60**

அ. தமிழில் வேற்றுமை உருபு
ஆ. சிலப்பதிகாரம் காட்டும் சமுதாய நிலை
இ. சமுதாய நோக்கில் பரணி இலக்கியம்
ஈ. இன்றைய தமிழில் வழங்கும் (ஆங்கிலம் தவிர) கடன் சொற்கள் யாவை?

**2)** தொல்காப்பியர் 'எழுத்து', 'சொல்' பற்றிக் கூறியுள்ள கருத்துக்கள் 'இன்றைய மொழியியலாளரும் வியக்குமாறு உள்ளன' என்பதை நிறுவுக. 60

**3)** சங்க இலக்கியம் காட்டும் 'பிரிவு' பற்றிக் கட்டுரை ஒன்று வரைக. 60

**4)** புதுக் கவிதைகளில் உவமை. 60

## SECTION-B

**5)** பின் வருவனவற்றுள் எவையேனும் மூன்றினுக்கு ஒவ்வொன்றிற்கும் 200 சொற்களுக்கு மிகாமல் சிறு குறிப்பு வரைக. **20×3=60**

அ. நாட்டுப்புற இலக்கியத்தின் சிறப்புக் கூறுகளை எடுத்துக் காட்டுகளுடன் விளக்குக.
ஆ. சோழர் கால கட்டிடக்கலை வளர்ச்சி.
இ. சங்கம் மருவிய காலம் உணர்த்தும் பண்பாடு
ஈ. தமிழில் ஊடகங்களின் வளர்ச்சி

**6)** இலக்கியத் திறனாய்வின் பல்வேறு கொள்கைகள் யாவை? விளக்குக. 60

**7)** தமிழ் இதழ்களின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிக் கட்டுரை ஒன்று வரைக. 60

**8)** பல்லவர்களின் ஆட்சியால் தமிழகம் பெற்றுள்ள நலன்களைத் தொகுத்து வரைக. 60

RADIAN IAS ACADEMY

**"GK-RADIAN" – ENGLISH Monthly Magazine.**
**"GK-ரேடியன்" - மாத இதழ் - தமிழில்.**
**(For UPSC, TNPSC & Banking Exams)**

**"If you are not reading this, then you are missing many things"**

**FIRST ISSUE: DECEMBER 2009** (Available at all our centres and Select book shops).
Contains: 1) Solution of **IAS-2009 Mains GS Papers**.
2) Solution of **2009 GROUP-1 Main Exam**.
3) Current Affairs round-up 2009 and many more articles in easy to read form.
(NO NEED TO READ ANY OTHER MAGAZINE, IF YOU REGULARLY READ THIS MAGAZINE)

To receive Daily FREE GK, Current Affairs, Exams Notifications, Results Alerts for UPSC-IAS Exams
Create this sms from your mobile **JOIN RADIANIAS** and send to **09870807070.**

**IAS 2009** **TAMIL PAPER-II (Literature)**

**Time Allowed: Three Hours** **Maximum Marks: 300**

**INSTRUCTIONS**

Candidates should attempt questions **1** and **5** which are compulsory, and any **THREE** of the remaining questions, selecting at least **ONE** question from each Section. All questions from each Section. All questions carry equal marks. Answers must be written in **Tamil.**

## பகுதி-அ
## (SECTION-A)

**1)** பின்வரும் வினாக்களில் எவையேனும் **மூன்றினைத்** தெரிவு செய்து ஒவ்வொன்றுக்கும் இருநூறு சொற்களுக்கு மிகாமல் விடை தருக: **20×3=60**

அ) குறுந்தொகையில் 'வேரல் வேலி' எனத் தொடங்கும் கபிலர்தம் செய்யுளில் முதல், கரு, உரிப் பொருள்கள் பொருந்தியிருக்கும் அழகை விவரிக்க.

ஆ) ஓர் இலட்சிய ஊர் எப்படி இருத்தல் வேண்டும் என்பதைப் புறநானூற்றில் இடம் பெற்றுள்ள 'யாண்டு பல' எனும் பிசிராந்தையார் பாடலைக் கொண்டு வரையறுத்துக் காட்டுக.

இ) 'மனித இன நடத்தைகளைச் சமுதாயமே தீர்மானிக்கிறது' என்பதைத் திருவள்ளுவர்தம் 'சிற்றமை சேராமை' எனும் அதிகாரத்தைக் கொண்டு விளக்குக.

ஈ) அரச குடும்பத் தலைமையினின்று மாறி, குடிமக்கள் காப்பியம் ஆகச் சிலப்பதிகாரம் படைக்கப்பட்டுள்ளது என்பதற்கான சான்றுகளைக் கண்ணகி பாத்திரப் படைப்பைக் கொண்டு நிறுவுக.

**2)** 'கவிதையிற் பெரியவன் கம்பன்' என்பதைக் கம்பனின் கும்பகருண வதைப் படலம் கொண்டு சான்று காட்டி நிலை நாட்டுக. 60

**3)** சிலப்பதிகாரம் சமயப் பொதுமைக் காப்பியம் என்பதை மதுரைக் காண்டம் கொண்டு நிறுவுக. 60

**4)** பின்வரும் பாடல்களில் வரும் இடத்தைச் சுட்டி விளக்கி, அவற்றுள் பொருந்தியிருக்கும் பொருள் நலங்களையும் விளக்குக: **20×3=60**

அ) எறும்பிடை நாங்கூழ் எனப்புலனா லரிப் புண்டலந்த வெறுந்தமியேனை விடுதி கண்டாய்.

ஆ) தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரியத் தூமம் கமழத் துயில் அணைமேல் கண்வளரும் மாமான் மகளே!

இ) ...............
கண்டது செய்து கருணைமட்டுப்
பருகிக் களித்து
மிண்டு கின்றேனை

## பகுதி - ஆ
## (SECTION-B)

**5)** பின்வரும் வினாக்களில் எவையேனும் **மூன்றினைத்** தெரிவு செய்து ஒவ்வொன்றுக்கும் இருநூறு சொற்களுக்கு மிகாமல் விடை தருக. **20×3=60**

அ) கட்சி அரசியல் பற்றி அறிஞர் மு.வ.வின் கருத்துரைகளைத் தொகுத்து வரைக.

ஆ) அறிஞர் அண்ணா, 'தமிழகம் தாழ்ந்துள்ளது' என்ற கருத்திற்கு அரணாகக் கூறுவனவற்றை எடுத்துரைக்க.

இ) குடும்ப விளக்கின் வழி பாவேந்தர் பாரதிதாசன் பார்வையில் இலட்சியப் பெண்ணின் செயல்திறனை வரிசைப்படுத்துக.

ஈ) கறுப்பு மலர்கள், தமிழ்க் கவிதையுலகில் ஒரு திருப்புமுனை என்பதை நிலைநாட்டுக.

**6)** மகாகவி பாரதியின் மிகச்சிறந்த படைப்பு 'கண்ணன் பாட்டு' என்பதைச் சான்று காட்டி நிறுவுக. 60

**7)** அகிலனும் ஜெயகாந்தனும் நவீனப் படைப்புலகின் இரு தூண்கள் என்பதைத் தெளிபடுத்துக. 60

**8)** நாட்டார் பாட்டியலில் கி.வா.ஜ., நா.வானமாமலை ஆகியோர்தம் பங்களிப்பை மதிப்பீடு செய்க. 60

RADIAN IAS ACADEMY